# விடியல்

## சமூக அறிவியல் இதழ்










சமஷ்டியை
வேண்டாமென்றோ



**மாவை மண் கவ்வுவாரா...?**

**ரட்ணபிரியாவும் இராஜதந்திரமும்**



ஆனி 2018 இதழ் 01 விலை :30ரூபா





# Nehru

Eye Rose

**Digital Studio & Beauty Parlur**

**Chavakachcheri Road, Silaiyady, Manthikai.**

Nehru Digital Photo&Video

| Point Pedero | Manthikai | Kondaavil | Kodikaamam | Canada |
|---|---|---|---|---|
| 0212260128 | 0774242596 | 0212053656 | 0775760666 | 514-557-1263 |
| 0774242596 | 0775760666 | 0779587676 | 0778990666 | 514-991-1414 |

# விடியல்

## கலை, அரசியல் சமூக இதழ்

திசை 01 ஒளி 01

ஆனி 2018

பிரதம ஆசிரியர் : ச.சாரு
உதவி ஆசிரியர் : உ. யுகதீஸ்

விலை : 30 ரூபா

அட்டை, பக்க வடிவமைப்பு : பிரஞ்ஞன்

பதிப்பு : ஸ்நேகன், கொடிகாமம் வீதி,
நெல்லியடி



முகவரி : வத்திராயன் வடக்கு,
தாளையடி.

vidiyalmagazine@gmail.com
T.P: 0702083803


## புதுவிடியல்

இலக்கிய உலகிற்கு விடியல் கலை, அரசியல், சமூக இதழ் புதுவரவு எமது தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் சிற்றிதழ்களின் போதாமை உணரப்பட்ட நிலையிலேயே எமது இந்த விடியல் உதயமாகின்றது.

காலத்தின் தேவையாக இந்த புது முயற்சி உணரப்பட்ட போதிலும், நீண்ட நாட்களாக மனதில் முகிழ்ந்த எண்ணத்தினையே செயலாக்கி இருக்கிறோம்.

கலை இலக்கியம் சமூகம் மற்றும் அரசியல் சித்தாந்தங்களையும் இவ் ஏடு தாங்கி நிற்கும்.

ஒரு சிற்றிதழின் வருகையின் பின்னால் இருக்கக் கூடிய அத்தனை வலிகளுடனும், பலவீனங்களுடனும் முதல் இதழ் வருகின்ற போதிலும் எதிர்காலத்தில் தன்னம்பிக்கையுடன் தளராது நடைபோடும் என்பதனை வாசகருக்கு அறியத் தருகின்றோம்.

இத்தகைய எமது புது முயற்சிக்கு வாசகர்களாகிய உங்களின் ஆக்கமும் ஊக்கமும் பலம் சேர்க்கும்.

புதிய எழுத்தாளர்களை உருவாக்குவதற்கும் படைப்பாளிகளின் படைப்புகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும் இது ஒரு உறுதிப்பாலமாக அமையும் என்பதனையிட்டு மகிழ்வடைகின்றோம். ●

# மாவை
## மண் கவ்வுவாரா?

"ஓடு மீன் ஓடி உறு மீன் வரும் வரைக்கும் வாடி நிற்குமாம் கொக்கு" என்பதை போல பெரிய ஒரு கடல் வெளியிலோ அல்லது ஆற்றிலோ கொக்கு காத்திருந்தால் எழிதாக தெரிவது போல நீண்ட காலமாக தமிழரசின் தலை மாகாணசபைக்காக காத்திருப்பது யாவருக்கும் தெட்டதெளிவாக தெரிந்து விட்டது மட்டுமல்லாமல் ஊடகங்களிலும் வந்தசெய்தி.

40 வருடங்களுக்கு மேலாக பல களங்களை கண்ட தியாகங்களையும் விட்டுகொடுப்புகளையும் செய்த சிறை வாழ்க்கையும் அனுபவித்து கண்ணகி வள்ளத்தில் கடல் கடந்த கதைகள் பல மாவைக்கு உண்டு என்பதனை தமிழரசுகட்சியில் உள்ளவர்களுக்கு மட்டுமின்றி மற்ற கட்சியிலுள்ள பெரியவர் உட்பட சிறியவர்களுக்கும் [illegible]




ஸ்ரீலங்கா அரசாங்கம் எவ்வளவு விட்டுக் கொடுப்புகளை செய்தாலும் தன்னுடைய குணங்களை அவ் அவ்வப்போது காட்டிகொண்டு இருக்கிறபோது. எமது மக்களின் விமர்சனங்களை வெளிக்காட்டி நேரடியாக எதிர்த்து அறிக்கையை விடுவதினால் தான் சம்மந்தனுக்கும் அரசுடன் பேசும்போது கூட்டிக்காட்ட கூடியதாக இருக்கின்றது. முதல்வரின் விடாப்பிடி துணிச்சல் என்பது காலத்தின் தேவை. இதை முதல்வராக இருந்து கொண்டு செய்வது கடினம் என்பது சம்மந்தனுக்கு நன்கு தெரிந்த விடயம்.

இந்த நிலையில் வடமாகாண சபை தேர்தல் யாருக்கு முக்கியத்துவம் கொடுப்பது எல்லோருடைய கேள்வியாக ஆரம்பிக்க தமிழ்தேசிய கூட்டமைப்பின் மற்றைய கட்சிகளின் எதிர்பார்ப்பதை மீறி இந்த விடயத்தை முடிவெடுக்க முடியாது. ஏற்கனவே பனிப்போர்கள் சில யாழ் மாவட்டத்தில் எப்படியாவது ஒரு இடத்தை பிடிக்கவேண்டும் என்று தலைகீழாக நின்று தடுமாறும் ஸ்ரீலங்கா சுகந்திரக்கட்சி ஒருபுறம். இதற்காக பிரதி சபாநாயகர் கொடுக்கும் முயற்சி தோல்வியடைய உடனடியாக சூட்டோடு சூடாக பிரதிஅமைச்சர் பதவி இப்படி பல முயற்சிகள் ஒருபுறம் இருக்க.

***தமிழரசுக்கட்சியின் மகாநாடு முல்லைத்தீவில் நடைபெற்றிருக்கிறது. இதில் உள்ளாராட்சிமன்ற உறுப்பினர்கள் இருவரை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவது பற்றியும் அரசியலமைப்பின் வரைவு பற்றியும் மட்டுமே கலந்துரையாடல் நடைபெற்றாலும் அடுத்த கட்ட தேர்தலுக்காக கட்சியினை தயார்ப்படுத்துவதற்கான ஓர் உள் நோக்கம் இருந்ததாக தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் மூலம் அறியமுடிகின்றது.***

"யாரை நம்பி நாம் இருந்தோம் போங்கடா போங்க நம் காலம் வந்த பின்பு வாங்கட வாங்க" என்ற மாதிரி கடந்த மாகாண சபை தேர்தலை எதிர்த்த அதே முன்னனி மீண்டும் காலம் வந்து விட்டது வாங்கோ வாங்கோ என தங்களுடைய வேட்பாளர்களை தேடி அலையும் கட்டம் ஆரம்பித்து விட்டது. இதற்காக ஆடு வாங்குவதற்கும் தையல் மிசின் வழங்குவதற்கும் கிராமப்புறங்களில் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் மறுபுறமும் வேலைவாய்புக்களை வழங்கியதினூடாக குறிப்பிட்ட ஒருவாக்கு வங்கியை நம்பி இருக்கும் (E.P.D.P) ஈபிடிபி காத்திருக்க இவர்களுக்கு மத்தியில் த.தே.கூட்டமைப்பை எப்படி நகர்த்துவது என்பதும் ஒரு விதமான கேள்வியாக எழத்தான் செய்கிறது. கடந்த முறை வடக்கு மாகாணசபையில் உள்ள 38 உறுப்பினர்களில் T.N.A 30 ஆசனங்களை கைப்பற்றினாலும் தமிழரசுக்கட்சி 17 உறுப்பினர்கள் இருக்கின்றனர். எதிர்வரும் தேர்தலில் ரி.என்.ஏ 38 உறுப்பினர்களில் 25 பேர் வெற்றி பெறுவதே கேள்விக்குறியாகவுள்ளது.

இந்த நிலையில் தான் தமிழரசுக்கட்சியின் மகாநாடு முல்லைத்தீ வில் நடைபெற்றிருக்கிறது. இதில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் இருவரை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவது பற்றியும் அரசியலமைப்பின் வரைவு பற்றியும் மட்டுமே கலந்துரை யாடல் நடைபெற்றாலும் அடுத்த கட்ட தேர்தலுக்காக கட்சியினை தயார்ப்படுத்துவதற்கான ஓர் உள் நோக்கம் இருந்ததாக தமிழரசுக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் மூலம் அறிய முடிகின்றது. யாருக்கு மாலை என்பதை தமிழ் மக்களின் மனங்களை அளந்து பார்க்குமா T.N.A .?



**● வினுயன்**

# வீட்டுக்கு வீடு

சித்ரா பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தாள். காலை எழுந்த கையோட தேநீர் "ஆத்தி" எல்லோருக்கும் கொடுத்துவிட்டுக் காலை ஆகாரம் தேடுவதில் முனைந்தாள். சமையல் செய்து முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அவளை கிஞ்சித்தும் நோகவிடாது எல்லா வேலைகளையும் தன் தலைமேல் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து முடிக்க தயாளன் இன்று ஒரு அவசர வேலை நிமித்தம் காலையில் 'பிளேன்ரீயுடன்" புறப்பட்டுப்போக சகல வேலைகளும் இவள் தலைமேல் பொறிந்துவிட்டது.



அம்மா! அம்மா! எனக் கழிப்பறையிலிருந்து சின்னமகளின் கூச்சல் செவிப்பறையில் நாராசமாய் மூட்டியது. அவள் காலைக்கடன் முடித்து விட்டதன் அறிகுறி அது விரைவில் வந்து குளிப்பாட்டிவிடும்படி அறைகூவல் விடுகிறாள்.

ஐயோ! நேரம் போச்சுது இவள் ஒரு..... பொவாதன், நான் என்ன சும்மா இருக்கிறனே! எரிச்சலுடன் கத்திவிட்டு அடுப்பில் எண்ணெய்ச் சட்டியில் போட்டது போட்டபடியே இருக்க, கழிப்பறைப் பக்கம் ஓடினாள் ஏதோ "காணான் கோணான்" என அவளைக் கடமைக்கு குளிப்பாட்டிவிட்டு........எடி எடியே! அடுப்பிலே போட்டது கருகப் போகுது" எனப் பதறியபடி அடுப்படிக்குள் போய்ப்பார்த்தால் கருகப் போகுதென்ன கருகியெ விட்டது. " இனி என்ன! உங்களுக்கு பொரியலும் இல்லை மண்ணாங்கட்டியுமில்லை " வெறும் புட்டை 'மிண்டி' விழுங்கிவிட்டுப் போங்கோ எனப் புறுபுறுத்தபடி பால் பாத்திரத்தை அடுப்பில் ஏற்றிப் பாலை ஊற்றி...... "அம்மா! அம்மா......... மறுபடியும் காட்டுக்கத்தல் அண்ணா, என்னை 'யூனிபோம்' போடவிடானாம். 'ரை'யைப் பறிச்சுக் கொண்டு ஓடுறான்...

டேய் தமிழ் நீ பூசை வேண்டப் போறாய் அவளின்ர 'ரை'யைக் குடுத்திட்டு வதவதவெண்டு சாப்பிடு

அங்கைபார்! நேரம் ஏழரையாயிட்டுது. நேரம் போச்சுது...! வழக்கமான சுலோகம் தான் "பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகுதெல்லோ "அதன் பிறகுதான் அவன் புட்டை நோண்டிக் கொண்டிருந்தான். அவனுக்கு இரண்டு கவளம் என்றதும் ஊட்டிவிட்டால் தான் சாப்பாடு இறங்கும். அதற்கு அவளுக்கு எங்கே நேரம் இப்போது நேரம் போச்சுது சாப்பிடு கெதியா எனக்குப் புட்டு தின்னுறதென்றால் மாம்பழம் வேணும்.

மாம்பழம் என்ன கொப்பற்றை தோட்டத்தில் கொட்டிக் கிடக்கே? புட்டைக் கெதியாக விழுங்கு அல்லது சாப் பாட்டுத் தட்டை வைச்சிட்டுக் கையைக் கழுவு மிச்சத்தை நாய்க்குப் போடலாம்.

"ஐயோ! அவரும் இண்டைக்கெண்டு கண்டறியாத 'கம்மக்கை'யிலை போயிட்டார். நான் இதுகளோட படுற சீரழிவு" எனப் புறுபுறுத்தபடி இருவரின் சாப்பாட்டுப்

**மாம்பழம் என்ன கொப்பற்றை தோட்டத்தில் கொட்டிக் கிட க்கே? புட்டைக் கெதியாக விழுங்கு அல்லது சாப்பாட்டுத் தட்டை வைச்சிட்டுக் கையைக் கழுவு மிச்சத்தை நாய்க்குப் போடலாம்.**

பெட்டியில் சாப்பாட்டை வைத்துப் பூட்டி வெளியில் வந்தாள்.

இருவரும் சாப்பிட்டு முடித்த பாடில்லை. இருவரின் சாப்பாட்டுத் தட்டுகளையும் பறித்து ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு இருவரும் யூனிபோம் அணிவதைச் சரியாக்கி விட்டாள். தமிழை நடந்து போகுமாறு பணித்துவிட்டு சின்னவளைச் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போவதற்கு ஆயத்தமாகிச் சைக்கிளை எடுத்தாள்.... சைக்கிள் சில்லில் காற்றில்லை 'வால்ப்' போட்டுதோ என விசனப்பட்டபடி கழற்றிப் பார்த்தால் 'வால்ப்' சரியில்லை. ஓடிப்போய் இலாச்சியைத் திறந்து பார்த்தால் நல்ல வேளையாக வால்வ் துண்டொன்று பல்லை இளித்தபடி கிடந்தது. இனி புதிய வால்வு மாற்றிக்காற்றடித்து... ஒருவாறாக சின்னவளை ஏற்றிக்கொண்டு சைக்கிளை உன்னி மிதித்தாள். நல்ல வேளை கடைசி மணி அடிக்கவில்லை. அவளை இறக்கி உள்ளே அனுப்பி விட்டு வீட்டுக்கு விரைந்தாள்.

ஐயோ! அப்பொழுதான் நினைவு வந்தது. மதிய உணவுக்காகச் சோற்றுக்கு உலை வைத்துவிட்டு போனது. கிளைந்த அரிசி நனைந்தபடி ஊறிக்கிடந்தது ஓடிச் சென்று பார்த்தால் உலையில் நீர் கொதித்துக் கமறிக் கொண்டிருந்தது. அரிசியை உலையில் இட்டு நெருப்பைத் தளணித்து விறகைத் தள்ளிவிட்டவள்

எட்டி நேரத்தை நோட்டம் விட்டாள். நேரம் எட்டரைமணியும் தாண்டிவிட்டது. நேரம் போச்சுது...!

இத்தனைக்கும் அவள் மனம் ஒரு நிலையில்லை மனசு சஞ்சலப் பட்டது சங்கடப்பட்டது. நேற்று மாலையில் அருந்ததி அக்கா சொல்லிவிட்டுப் போன சங்கதிதான் மனதைக் குடைத்து கொண்டிருந்தது.

அவள் வள்ளிக்கு ஆபத்தாம் அவளைக் கொல்லச் சதி நடக்குதாம் அவள் வள்ளி எவ்வளவு நல்லவள், குணக் கொழந்து உற்ற கணவனை உளமாரக் காதலிப்பவள், அவனைத் தெய்வமாக மதிப்பவள். கடைத்தெகுத்த காவாலியாகத் திரிந்த அவனை விதிவசத்தால் கணவனாக அடைந்தும் அவனைத் திருத்தி நல்வழிப்படுத்திய புனிதவதி அவள் அவளின் நிம்மதியான வாழ்க்கையை கண்டு சகிக்காத அவளுடைய மைத்துனி அவளக் கொல்லச் சதிசெய்தால்...அன்று அவர்கள் முதலிரவுக்காகக் கோட்டல் செல்லும் போது வழியில்... மறித்து... ஐயோ பாவம் வள்ளி! அவளுக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாதே! அம்ம னாச்சி தெய்வத்தை மனமார வேண்டினாள்.

சித்திராவுக்குக் கையும் ஓட வில்லை, காலும் ஓடவில்லை. வள்ளிக்கு என்ன நேருமோ என எண்ணியவளுக்கு ஒரே பதற்றத்தில் வெண்டைக்காய் நறுக்கியவள் அவளின் கைவிரலையும்

## தாண்டவம்

*காட்சிகள்*
*மாற மாற*
*திரைகள் மூடிக்கொள்கின்றன*
*புதிது புதிதாய்*
*கதைகள்*
*உருவாகின்றன*
*மேடைகள் மாறுகின்றன*
*எனினும்*
*நடிகர்கள் மாறவில்லை*
*நடித்துக் கொண்டேயிருக்கிறார்கள்*
*எந்த காட்சியும்...*
*எந்த கதையும்...*
*இதுவரை*
*முற்றுப்பெறவில்லை.*
*காலம் கடந்து போகிறது*
*தனக்கே உரித்தான மாற்றத்துடன்*
*மீண்டும் மீண்டும்*
*துளிர்த்து கொள்கிறது*
*வசந்தகால எண்ணங்கள்*
*எனினும்*
*கண்ணெதிரே*
*நிஜம் இன்னொன்றாய்*
*நீளுகிறன...*
*தளிர் விடத் துடிக்கும்*
*இலைகள்*
*ஒவ்வொன்றாய் உதிர்கின்றன.*
*கடவுளர்கள்*
*புன்னகையை*
*பிடுங்கி எறிந்துவிட்டு*
*தாண்டவமாடத்*
*தொடங்கி விட்டார்கள்*

● தீபாஜி

நறுக்கிவிட்டாள். இரத்தம் கொளகொள வெனக் கொட்டுகிறது. விரலுக்குச் சுற்றி அப்போதைக்கு ஒரு கட்டு கட்டிவிட்டு வோம் என்று 'பன்டேஜ்' துணியைத் தேடினாள்.. ஒரு சாமான் வைத்த இடத்தில் இருந்தால் தானே வீட்டிலை தறுதலைப் பிள்ளைகள் எங்கேயோ இடம் மாற்றி வைத்துவிட்டுதுகள் போலும் அதைத் தேடிவிரலுக்குப் பஞ்சுவைத்துக் கட்டுப் போட்டு.... உலையில் சோறு பதம் தப்பி வெந்துவிட்டது. அதை வடிக்கப் போனால் சோறு குமைந்துவிட்டது. இண்டைக்கு அவரிட்டை அர்ச்சனைதான் கேட்கவேணும், உலையை வடித்துக் கிளறிவிட்டு. தேய்காய் துருவிக் கறி சமைத்து வறுவல் செய்து,பொரியலாக்கி.. சொதிவைத்து

"நேரம் அங்கை பத்தரை மணி யாப் போச்சு" எனச் சூழ்கொட்டிய படியே அவசர அவசரமாக சாமான்களை ஓறாறு பண்ணிவிட்டு உடைமாற்றி பாலர் வகுப்புக்கு செல்ல ஆயத்தமானாள். அங்கே பிள்ளை நின்று அம்மாவைக் காணயில்லை எண்டு முழிக்கப் போகுது?

சைக்கிளை எடுத்துக் கொண்டு ஒரே ஓட்டம் நாலோட்டமும் சில்லறைப் பாய்ச்சலுமாய் ...ஓட்டம்.. ஓட்டம் ...

நல்ல வேளையாக அப்பொழுது தான் பிள்ளைகள் வண்ணப் பறவைக ளாய் வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தாள். வதவதவென விட்டகுறை தொட்டகுறையெல்லாம் பார்த்து பாசகத்தை முடித்தாள்.

அப்பாடா ஒன்றரைமணியாச்சா சின்னவளுக்குரிய சாப்பாட்டுக் கோட் டாவை தட்டில் இட்டு குழம்பு வேண்டாம் உறைக்கும்.. வெள்ளைக்கறி ஐயோ அவள் சாப்பிடமாட்டாள் கொஞ்சம் பருப் பும் பச்சைமிளகாய் போடாத வெள்ளைச் சொதியும் மாத்திரம் போட்டு கூடத்துக்கு வந்தால். சின்னவள் ரீவியில் வயித்திருந் தாள்.

என்னவோ ஒரு 'சனலில்' ஏதோ ஒரு படம் அரைகுறை ஆடையுடனான ஒரு அழகியை வாலிபன் வருத் திக்கொண்டிருந்தான். அவனோ அவனு டைய கோரிக்கைக்கு மசிவதாய் இல்லை, அவனை எடுத்தெறிந்து பேசிவிட்டு அப்பால் நகர.. அவன் விடுவதாக இல்லை. பின்னே தொடர.....

சின்னவள் சிரித்த படியே அம்மாவை நோக்கி " இவன் என்ன மோடனாகக் கிடக்கு அவளைக்கு ஒரு ரோஜாப்பூவைக் குடுத்து அவளை மடக்கலாம் தானே" என்றாள் பெரியமனுசி தோரணையில்

சின்னவளுக்கு ஆறு வயதும் பூர்த்தியாகவில்லை முதலாம் தரத்தில் படிக்கிறாள் முளைத்து மூன்று இலைவிட வில்லை. காதலுக்குக் கட்டியம் கூறுகிறது.

சித்திராவுக்குச் சீற்றம் தலைக் கேறியது. "கொண்டாடி றிமோட்டை இது

தான் சுட்டி டி.வி பார்க்கிற இலட்சணம் படம் பார்க்கிறாள் என்ன? வாடி சாப்பிட..."அருகில் அழைத்து சின்னவளுக் குச் சாப்பாடு ஊட்டுவதில் முனைத்தாள்.

"அம்மா! எனக்குப்பசிக் கேல்ல" ஒரு சினுங்கல் "ஓ" இப்ப பசிக்காது பின்னேரம் நாலுமணிக் குத்தான் பசிக்குமாக்கும் ... வாயைத் திறவடி..." சாப்பாட்டைத் திரணையாக உருட்டி வாய்க்குள் பொதிந்தாள்.

சின்னவள் ஓரக்கண்ணால் டி.வி. யைப் பார்த்தபடி வாயைத் திறந்தாள். சாப்பாடு போய்க் கொண்டே இருக்கிறது வாய்க்குள் பாதிவெளியில் மீதி....

ஆ! இனி என்ன சித்திரா எதிர்பார்த்த அந்த வேளை நெருங்கி விட்டது. இரண்டு மணி சரியாக.

"வள்ளி...வள்ளி...வள்ளீ" ரீங்காரமாய் ஒலித்தது. "அம்மா! வள்ளி தொடங்கப் போகுது" சின்னவள் குதுகலித்தாள். அவளுக்கும் கதை அத்துபடி.

குசினிக்குள் விரைந்த சித்திரா சாப்பாட்டுத்தட்டில் ஒரு அகப்பை சோறும் இரண்டு இறைச்சித் துண்டும் போட்டுக் கொண்டு கோலுக்கு விரைந் தவள் கதிரையில் அமர்ந்தபடி சின்னவ ளுக்குச் சோற கவளம் ஊட்டினாள்.
வள்ளி தொடங்கிவிட்டது. வள்ளியை ஒரு கார் துரத்திக் கொண்டுவருகிறது. வள் ளிக்கு இன்று 'அனுத்த' காலம் தான் உன்னிப்பாக படத்தைப் பார்த்தபடி சோற்றுக் கையை சின்னவள் பக்கம் நீட்டினாள். கை இங்கே பார்வை அங்கே வள்ளியைத் தொடர்ந்து நீட்டிய கைப் பிடிச் சோற்றை வாயில் வாங்காதே சின்னவள் மெல்ல நகர்ந்தாள் அடுக்களையை நோக்கி ஒரு மிடறு தண்ணீர் குடிக்க அவளுக்கு உறைப்பு காரம் தாங்கமுடியாமல்

நீட்டியசோற்றுக் கை நீட்டியபடி இருக்க சித்திரா ரீ.வி.யில் லயித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் அதைக் கண்ணுற்ற ஜிம்மி இறைச்சி வாசம் சேர்ந்த சோற்றுப்பிடியை லபக்கெனக் கவ்வப்போக சித்திரா அப்போதுதான் திடுக்குற்றுக் கையை இழுத்தாள் கையில் ஜிம் மியின் பல் ஆழமான கீறலுடன் பதிந்து விட்டது. இரத்தம் கசியக் கசிய அவளுக்கோ எரிச்சல் கண்டது.

ஐயோ! சனியன் கடிச்சுப் போட்டுது என எரிச்சலுடன் கையை தூக் கியவள் செய்வதறியாது திகைத்து நின்றாள். சின்னவள் அம்மா அம்மா என்ற படி விம்மிக் கொண்டிருந்தாள். சோற்றுக் கையும் வாயும்...

அப்போது பாடசாலையில் இருந்து வந்த தமிழ் அம்மா அலறு வதைக்கண்டு கலங்கியபடி போனை எடுத்து அப்பாவுக்குச் சொன்னாள்.பாதி வழியில் வந்தவர் அக்சிலேட்டறை

அமுக்கி முறுக்கி வீட்டில் வந்து நின்றார் சனியன்களே நாய்களே எருமைகளே! உங்களுக் கொரு நாடகம் தான் குறைச்சல், வெளிக்கிடுங்கே ஆஸ்பத் திரிக்கு என்றபடி பரபரத்தான், ஓடிக் கொண்டிருந்த டி.வி றிமொட்டைச் சொடுக்கி அணைத்தபடி உங்களுக் கொரு நாடகம் ரீ.வி யை ஓவ் பண்ணி விட்டு சாப்பிட்டு விட்டு ரியூசனுக்குப் போக ஆயத்த மாகுங்கோ நாங்கள் வந்திடுவோம் என்றபடி சித்திராவை சைக்கிளில் ஏற்றியபடி ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தான். பசி ஒரு பக்கம்

"ஐயோ இரண்டு பல்லு ஆழ மாகப் பதிந்து போச்சு ஊசிபோட வேணும். டாக்குத்தர் இன்னும் வர வில்லை. ரிக்கற் போடுகிறம் வாட்டிலே இருங்கோ சொல்லியவாறே தாதி அப்பால் செல்லுகிறாள்.

வழக்கமான நடபடிகள் முடிந்து வாட்டில் கொண்டுபோய் விட்டார்கள். டாக்டர் வரும்வரை காத்திருக்கவேணும் அதோட இன்னைக்கு என்னை வீட்டுக்கு விடுவினம் என்று தோன்றயில்லை. எனஆலோசனையில் ஆழ்ந்தபடி ஆஸ்பத்திரிக் கட்டிலில்"

அப்பொழுதும் அவளுடைய சிந்தனை வள்ளிக்கு என்ன நடந்திருக்கும் என்றபடிதான் இருந்தாள். பக்கத்து வீட்டு அருந்ததிமாமியைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான் வேறென்ன செய்ய?

• புலோலியூர் செ. கந்தசாமி

## கடவுள்

கடவுளாக
காணும் மனிதர்கள் கூட்டம்
அரிது மானிடனே...
உனக்குக் கடவுளாக உள்ளவர்
ஊருக்கே
உருண்டைக்கல்லாகத்
தெரியலாம்
மனித வடிவில் வரும்
மிருகங்களையும்
சிலருக்குக் கடவுளாகத்
தெரியலாம்
அவரவருக்கு
அவரவரின் கடவுள்
பெரிதாகவே இருக்கும்

• அரிநாம்

## விரிசல்...


வேண்டாம் என்று
போற உறவுகளை
இடைஞ்சல் செய்யாதீர்கள்
பிரிவில்
உங்கள் நினைவுகள்
நிழலாடும்
உணர்ந்தால்
தேடி வரட்டும்
வெறுத்தால்
விலகிச் செல்லட்டும்...

• அம்பன் நிதர்ஷன்

# சுண்டிக்குளமும் பங்களாவும்

"சுண்டிக்குளம்" 1986 க்கு முன்னர் ஒற்றையடிப் பாதையை தாண்டினால் வாடிகளும் தங்கி தொழில் செய்யும் கொட்டில்களும் கடற்கரை நீளவும் வரிசையாய் நீண்டிருக்கும். கட்டைக்காடு தாண்ட தொடுவாய்களே சுண்டிக் குளத்தை ஆக்கிரமித்திருக்கும். தொழிலை மையப்படுத்தியே அங்கே குடியிருப்புக்கள் அல்லாத கொட்டில்கள் பல காணப்படுகின்றன. இப்பொழுது அங்கு இராணுவ முகாம் காவல்துறை நிலையம் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நிர்வாக அலகாக காணப்படுகின்றது.

வெற்றிலைக்கேணி கோரி மற்றும் குடாரப்பு கோரி (வெளிச்சவீடு) ஆகிய கோரிகளை போர்த்துக்கேயர் 1800 ஆம் ஆண்டளவில் கட்டியதாகவும் போர்த்துக்கேயரின் மதம் உரோம கத்தோலிக்கம். றோ.க.பாடசாலைகள் எல்லாம் போர்த்துக்கேயரினுடையது. வடமராட்சி கிழக்கில் எல்லாம் ஆரம்பத்தில் சைவகாரர்கள்தான் இருந்தார்கள். பின்பு போர்த்துக்கேயரின் காலத்துக்கு முதல் தான் இந்திய மன்னர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். செம்பியன்பற்று என்பது ராஜராஜ சோழனுடைய காலத்துப் பெயர்.




ராஜராஜ சோழனுடைய துறைமுகமாக அந்த இடம் இருந்தபடியால தான் செம்பியன்பற்று என பெயர் வந்தது. இந்தியாவில் இருந்து செம்பியன்பற்றில் இறங்கி தான் பொலநறுவைக்கு படையெடுத்து போனார்கள். காட்டுவழியாக பொலநறுவைக்கு சென்று சண்டை செய்து இலங்கையினுடைய அரச ஆட்சியை கைப்பற்றியதாக ராஜராஜ சோழனுடைய வரலாற்றில் இருக்கிறது. செம்பியன் என்ற ஒரு சிற்றரசன் இந்த இடத்தில் ஆட்சி செய்தபடியால் தான் செம்பிறன்பற்று என்று பெயர் வந்தது என கூறப்படுகிறது அப்படியாக வந்தவர்கள் தான் குடியேறி இருந்தவர்கள் என்றும் இன்னொரு கதையும் சொல்லப்படுகிறது. அந்த கரையோரத்தில் இருந்தவர்கள் தான் எப்பொழுதும் பலசாலியாக இருப்பார்

களாம் என்று சொல்வதற்கு காரணம் கரையோரங்களில் அந்த காலத்து அரசர்மார்கள் பலசாலிகளைத்தான் குடியமர்த்தினார்கள். ஏனென்றால் இந்த நாட்டை காப்பாற்றுவதற்காக.

கவர்னருடைய சுற்றுலா விடுதி சுண்டிக்குளத்தில அமைந்திருந்தது. ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில யாழ்ப்பாணத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்படும் கவர்னர் (ஆளுநர்) இந்த சுற்றுலா விடுதியில் தன்னுடைய ஓய்வு காலத்தை கழிப்பர். இதை பங்களா என்று சொல்லுவார்கள். இதனால் தான் சுண்டிக்குளத்தில தபால்கந்தோர் முதல் முதல் வந்ததாக சொல்லப்படுகிறது. இந்த கடிதங்களை கொண்டு போய் கொடுப்பவர்கள் கால்நடையாக ஓடி ஓடி போய் தான் சேர்ப்பார்கள் இதனால றன்னர் என்று அழைக்கப்பட்டனராம். இப்பொழுதும் தபால் கந்தோர்களில் றன்னர் என்று ஒருவர் இருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது.




பலவிதமான வரலாற்று கதை களை பலர் கூறினாலும் இவர்கள் எல்லாருடைய கதைகளிலும் வடமராட்சி கிழக்கு கரையோரங்களில் ஒவ்வொரு காலங்களிலும் மன்னர்கள் சிற்றரசர்கள் தங்களுடைய நேரடி பார்வைக்குள் இந்த இடங்களை வைத்திருந்திருக்கின்றார்கள். இதற்கு காரணம் இதன் அமைவிடம் எல்லா வழிகளிலும் பயன்படுத்தக் கூடியமாதிரி வடக்கே பெருங்கடலும் தெற்கே சிறிய ஆறு போன்ற நீரேரியும் காணப்படுகிறது. ஒவ்வொரு சீசனும் வேறு வேறு தொழில்களை செய்து கஸ்டம் இல்லாமல் வாழக்கூடிய மாதிரியான ஒரு வளமுள்ள பிரதேசமாக காணப்படுகிறது.

மாசி மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரைக்கும் பெருங்கடலில் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஐப்பசி தொடக்கம் மாசி வரைக்கும் கடுமையான காற்று மழை காரணமாக கடல் கொந் தழிப்பாக இருப்பதனால் கடலுக்கு செல் வதை நிறுத்திவிட்டு வயல் விதைப்பதில் ஈடுபடுபவர்களை தவிர ஏனையோர் சிறு நீரேரியாகவுள்ள தெற்கு பகுதியில் வீச்சு தொழிலிலும் சுண்டிக்குளத்தில உள்ள நீரேரியில் இறால் பிடிப்பதிலும் ஈடுபடுவர். இதே சமயம் கோடை காலங்களிலும் கடற்றொழிலை முடித்துக்கொண்டு காலையில் விவசாயமும் செய்பவர்களின் தொகை கூடுதலாகவும் முன்பு காணப் பட்டது. அந்த நேரத்தில வெற்றிலைக்

கொடிகள் கூடுதலாக இங்க இருந்த படியாலும் கேணியை அமைத்து தோட்டம் செய்தபடியாலும் வெற்றிலைக்கேணி என்று பெயர் வந்ததாகவும் அந்த காலங்களில வீரக்களி ஆறு வற்றிப் போறதாகவும் இந்த வெற்றிலைக்கேணியில் பெரிய பெரிய தோட்டம் செய்யிற ஆக்கள் எல்லாம் இருந்ததாகவும் ஊரிக்காடு வெற்றிலைக் கேணியோட இந்த ஆறு முடியிறதா கவும் இவடத்தடியிலதான் முன் வற்று கண்ணகை அம்மன் கோயில் இருந் ததாகவும் அது இப்போது உணவத்தை அம்மன் கோவில் என்று பெயர் மாறிய தாகவும் சொல்லப்படு கிறது.

இந்த வெற்றிலைக்கேணியில் கோரி இருந்த இடத்தில 7 , 8 கேணி இருந்தது. பழைய காலங்களில் இந்த கோரி இடங்களை அரசர்கள் ஆண்டிருந் தனர். இதற்கு பிறகு இந்த இடத்தில புதையல்கள் எல்லாம் இருந்து எடுத்தார்கள். இப்போதும் கலம் ஓடுகள் எல்லா இடமும் சிதறிகிடக்குது. அவ் இடத்தில் பெரிய குடிகள் இருந்தது. அது தான் அதற்குரிய தடயம். அதற்கு நேர ஒரு பாதை இருந்தது. அது நேர ஆனையிற வுக்கு போறது. ஆனையிறவில இருந்து இத ஒரு துறைமுகமாக பாவிச்சினம். இந்த கோரியடியில் பொரிய வெட்டை யும் கேணியும் இருந்தபடியால் எல்லா இடத்து மாடுகளும் தங்கி இருந்து சாணம் போடுறது. சாணம் போடுற படியால் கரிமுகவாயு பிராணவாயு இரண்டும் வெளியேறி இதனால் தானாகவே மரங்கள் பனை ஓலைகள் எல்லாம் எரியும். இப்படி எரிய பழைய காலத்து ஆக்கள் கோரியடியில் முனி கொழுத்துது என்று நினைக்கிறது. எட்டத் தில இருந்து பார்க்கேக்குள்ள அப்ப டிதான் தெரியும். அங்க போய் பார்த் தாலும் இந்த பனை ஓலைகள் எரிஞ்சிருக் கும். விஞ்ஞானமுறைப்படியாக இந்த வாயுக்கள் ஒன்று சேர்வதால் தான் இந்த எரிதல் ஏற்படுகிறது.

கப்பல் ஒன்று வெற்றிலைக் கேணியை தாண்டி வந்து ஆழியவளை யில புயலுக்கு கரை தட்டியது. அப்போது சின்னத்தம்பி விதானையார் என்று ஒருவர் இருந்தவர். உடையார் ஆக்களும் சேர்ந்து அதற்கு காவல் வைத்தார்கள். அதற்கு முதலே ஆழியவளை என்ற பெயர் வந்திட்டது. இதுக்கு காரணம் இந்த இடத் துக்கு நேர கடல் கொஞ்சம் ஆழம் கூட.



அதனால் ஆழியவளை என்ற பெயர் வந்திச்சு. மற்றது கோரியில இருந்து வரேக்குள்ள அந்த இடம் கொஞ்சம் வளைவு என்றபடியால் ஆழியவளை என்று வந்திச்சு என்றும் சொல்லுவினம். இங்க வந்து கடற்றொழில் செய்யிற சமூகம் தான். ஆனா இரண்டு தொழிலும் செய்வினம். கடலுக்கும் போறவ விவசாயமும் செய்யிறவ. மண்டலாய் கோவில் வரைக்கும் தோட்டமும் வயலும் செய்யிறவ. இங்கு கிரேப்பும் கொடிமுந்திரிகை) செய்தவ. கொடி முந்திரிகைப்பழம் கொய்யா தோட்டம் தென்னந் தோட்டம் உலாந்தா தோட்டம் இருக்குது. முந்தி உலாந்தா இங்க இருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் வந்து தங்களு டைய தொடர்பாடலுக்கு ஊருக்குள்ள ஒரு பெரியவர வச்சிருக் கிறது. இத அரசாங்க ஏஜென்ட் என்று சொல்லுறது. இவர தான் அந்த காலத் தில உலாந்த என்று சொல்லுறது. சின்னத் தோட்டம் பெரியதோட்டம் என்று இரண்டு இருந்தது. இப்பிடி தோட்டங்களோட கமத்தொழிலும் நடந்தது கடற்றொழிலும் நடந்தது என்று சிறிகந்தசாமி கூற அரியகுமார் எங்களுடைய பேரனுடைய காலத்தில ஒரு அரிசி கப்பல் வந்து வெற்றிலைக்கேணிக்கும் ஆழிய வளைக்கும் இடையில தரை தட்டியது. அந்த நேரத்தில அதில் இருந்த பொருட் களை சனங்கள் எடுத்து தங்களின் தேவைக்கு பயன்படுத்திய தாகவும் இது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நடந்தது என்று குறிப்பிட்டார்.

■ அ.சசி

## சிலையொடு வழக்காடல்

மனம் உடைந்து போன
இந் நாளில்
எல்லோரிடமுமிருந்து
ஒதுங்கி நடக்கிறேன்
நெஞ்சத்தில் மோதி விழும்
நெடுங்கால கேள்விகளை
உந்நிடம் விட்டுச் சொல்கிறேன்
உள்ளத்தின்
ஆழத்தின் ஆழத்தை
புண்படுத்திடும் சொற்களை
எங்கிருந்து பெற்றாய்?
தன்னம்பிக்கைகளை
சிதறடிக்கும் செயல்களை
திரும்பத் திரும்ப
ஏன் செய்தாய்?
மீள மீள
துயர்மிகு தீர்ப்புக்களை
எதற்காக என்மீது
ஏவினாய்?
கதறிக்கதறி
கண்ணீர் விடும் படியான
ஒரு காலத்தை
எப்படி என்னிடம்
அனுப்பி வைத்தாய்?
விலகி விலகி
சென்ற அந்த நாட்களில்
குறுக்கே
விடாப்பிடியாக கவன்றோ
வந்து தொலைத்தாய்

■ ஃபஹீமா ஜஹான்

# கரை புரண்டோடியது
# கடலட்டை விவகாரம்



வடமராட்சி கிழக்கு பிரதேசம் அன்று வணங்கா மண்ணாய் இருந்தது. அந்நியர் ஆதிக்கம் கூடியதால் இன்று வாடிகள் அமைத்து கோடிகள் சேர்க்கும் பிரதேசமாயிற்று. இறையருள் துணை கொண்ட மறையருள் கிராமம் அங்கு தான் ஆரம்பமானது. சிலர் காணி விற்ற லும் கடலட்டைக்கு அனுமதியும். கடற்றொழில் சங்கங்களும் அதன் மேல் சமாசமும் சம்மேளனமும் முட்டி மோதி யும் முடியவில்லை

அவர்களால். மக்கள் என்ன செய்வர் முறைப்பாடு ஒன்று முன்வைக் கப்பட்டது பிரதேச சபை தலைவர் அரியகுமார் அவர்களிடம். இடத்திற்கு விரைந்தார் நிலைமைகளை ஆராய்ந்தார். அவர் மட்டுமல்ல சில உறுப்பினர்களும் அங்கே அட்டை அவித்த நீர் ஊரெல்லாம் துர்நாற்றம் சுகாதாரம் எல்லாம் சீர்கெட்டு நிற்க உள்ளூரிலும் சென்று நிலைமை களை ஆராய்ந்தனர். நிலமையை பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்க அவர் சார்ந்த குழுவினரும் அதிகார வர்க்கத்தால் அந்நியர்கள் அடங்கவில்லை.

நிலமை சுமந்திரன் MPயிடம் செல்ல மக்களிடம் வந்து நிலைமையை ஆராய்ந்தார். மக்கள் கூட்டம் கூடினர். பிரதேச செயலகத்தில் மக்கள் உணர்ச் சிவசப்பட்டனர். இவையெல்லாம் சொந்த தொழில் செய்ய முடியாமல் வறுமையால் வாடிய நிலைமை என்பதை புரிந்து கொண்டார் சுமந்திரன் MP அவர்கள் அமைதியாக அடுத்த கட்ட

நடவடிக்கையை மேற்கொள்ளுவோம். இதன் முதற்கட்டமாக மாவட்ட செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நீரியல் வள திணைக்களத்திற்கு எச்சரிக்கை விடுவோம். பிரதேச செயலகம் முன்பு கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவோம். இதற்கும் முடிவு வராவிட்டால் நீரியல்வள திணைக்களத்தை இயங்கவிடாமல் அலுவலக செயற்பாட்டை முடக்குவோம் என பிரதேச செயலகத்தில் ஒன்று கூடிய மக்களை அமைதிப்படுத்தி ஆலோசனை வழங்கினார்.

இது பற்றி அட்டைத்தொழிலில் ஈடுபடுபவர்களுடன் கதைத்த பொழுது புதிய புதிய கதைகளை கூறுகின்றனர். இத் தொழிலுக்கு முழு பாதுகாப்பும் தருகின்றோம் என சில கடற்றொழிலாளர் சங்கங்கள் எழுத்து மூலம் எங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். கடற்றொழில் அமைச்சிடம் முறையாக அனுமதியும் பெற்றுள்ளோம்

கடற்றொழில் நீரியல்வள திணைக்களம் யாழ் மாவட்ட அதிகாரிகளுக்கும் சங்கத்தில் உள்ள சில உறுப்பினர்களுக்கும் இலட்சக்கணக்கான நிதியினை வழங்கியே நாங்கள் இத் தொழிலை செய்து வருகிறோம்.

இந்த வருடம் மட்டுமாவது இத்தொழிலை செய்வதற்கு அனுமதி தாருங்கள் இதற்காக இலட்சக்கணக்காண பணத் தினை செலவு செய்துவிட்டோம் என பெயர் குறிப்பிட விரும்பாத தொழிலாளர்கள் கூறினார்கள்.

மேற்படி இரண்டு விடயங்களும் நடப்பதற்கு முன்பு கடற்றொழில் அமைச்சருடனும் கலந்துரையாடலையும் சுமந்திரன் MP நடத்தியிருந்தார். இவை மூன்றும் பயனளிக்காத போது நீரியல் வள திணைக்களம் இயங்க முடியாதபடி பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட மக்களால் முற்றுகை இடப்பட்டு நிர்வாக முடக்கம் இடம்பெற்ற போதும் இந்த சட்டவிரோத கும்பல்களின் கடலட்டை விவகாரத்தை முற்றாக அழிப்பது சவாலாகவே உள்ளது.

இதற்கு ஒரு சில கடற்றொழிலாளர்களுடன் சில கடற்றொழில் சங்கங்களும் சில சமாச உறுப்பினர்களும் துணை போய்விட்டனர் என நீரியல்வள அதிகாரிகள் குற்றம் சாட்டினாலும் முறையற்ற சில கடிதங்களை நீரியல்வள திணைக்களமும் வழங்கியதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளை தங்களு டைய அரசியல நலனுக்காக பயன் படுத்தும் சில கட்சிகளின் நகர்வும் ஆரம்பித்து விட்டது. இந்நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கையினை மேற்கொள்ள மாவட்ட செயலகத்தின் பதில் என்ன என எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வடமராட்சி கிழக்கு மக்களின் வாழ்க்கையில் விதி விளையாடுமா ???? என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**• வத்தையூரான்**

தந்தை செல்வநாயகம் 74ம் ஆண்டு இடைத்தேர்தல் வைத்தபோது பெரிதாக வெற்றி வாகை சூடினார். அதில் இருந்து தான் தனிநாடு கோரிக்கை ஆரம்ப மானது. ஏன் என்றால் நாட்டிற்கின்று நாங்களாக ஒரு அரசியலமைப்பை உருவாக்கின்றபோது அதை இரட்டை ஆட்சி என்று வர்ணித்தது பௌத்தத்திற்கு முதல் இடம் கொடுத்தது. பேரின கொள்கையுடன் செய்யப்பட்டது. எங்களை தேசிய வாழ்க்கையில் இருந்து அப்புறப் படுத்தி விட்டார்கள். ஆகையினால் இந்த நாட்டில் எங்களுக்கு இடம் இல்லை.

ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது. இதுதான் தனிநாட்டு கோரிக்கைக்கான பின்னணி சமஸ்டி கொடுத்த போது வேண்டாம் என்று சொன்னோம். பின்பு சமஸ்டியை



## சமஸ்டி கொடுத்த போது...

# வேண்டாம் என்று சொன்னோம்

நாங்கள் தனியாய போகிறோம் என்று தனி நாட்டுக் கோரிக்கை 76 ஆம் கேட்டோம். சமஸ்டியை கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் தனி நாட்டை கேட்டோம். தனிநாடு கேட்ட


UTHAYAA
உதயா மல்ரி சொப்
மெத்தைக்கடைச்சந்தி, பருத்தித்துறை – 0770760365
CALTEX
TECRO


Colombo Tex
Best collection dresses
are one Shop
கொழும்பு டெக்ஸ்
கொழும்பு ரெக்ஸ்
Colombo Tex
No. 263, Main Road, Point pedro.
T.P : 077 9114 200, 077 7136740


லேடிஸ் கோணர்
Ladies Corner




பிரியங்கா ஆடையகம்
Preyanga Tex
இல. 03 பஸ் நிலையம், பருத்தித்துறை.

கையோடு அந்த நாட்களில் இளை ஞர்களும் அரசியலில் ஈடுபட்டார்கள். ஏன் என்றால் பரப்படுத்தல் கொள் கையினால் பல்கலைக்கழகக் கிற்கு தமிழ் மக்கள் போக முடியாமல் போய்விட்டது. சித்தியடைந்த தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத் திற்கு போக முடியாமல் போனதனால் இவர்களின் பெற்றோர்கள் காணி களை ஈடுவைத்து இங்கிலாந்திற்கு படிக்க அனுப்பினார்கள். அப்படியாக போனவர்கள் அங்கு இரண்டு குழுக் களை ஆரம்பித்தார்கள். இரண்டு குழுக்களும் இலங்கையில் ஆரம்பிக் கப்பட்டதல்ல. இரண்டுமே இங்கிலாந் தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. முத லாவதாக ஆரம்பிக்கப்பட்டது ஜெனற்ல் யூனியன் ஒப்(க) இஸ்ரு டன்ஸ் இரண்டாவதாக ஆரம்பிக் கப்பட்டது ஈரோஸ். இடண்டிலும் ஸ்ருடன் என்ற வார்த்தைகள் வரும். இங்கி ருந்து படிக்கச் சென்ற மாணவர்களால் உருவாக்கப்பட்டது. அதற்கு பிறகுதான் இங்கே ரெலோ ரைகேஸ் புளெட் வந்தது. அதற்கு பிறகு என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியும்.

இடையில் 1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு பாரிய வன்முறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு பிறகுதான் இந்திய அரசாங்கம் தலையிட்டு தமிழ் மக்களுக்கு ஒரு சுயாட்சி முறை ஒன்று கொடுக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் 87 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வடக்கு கிழக்கில் அதிகாரப்பகிர்வு முறை ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது.

அப்பொழுது தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சியாக இருந்த தமிழர் விடுதலை கூட்டணி இதை ஏற்று கொள்ளவில்லை. ஏனெனில் இது போதாது என்று வடகி ழக்கு மாகாணமாக இருந்த போது தமிழர் விடுதலை கூட்டனி போட்டியிட வும் இல்லை. எங்களுடைய சமுத் திரத்தில் வந்ததை அந்த நேரங்களில் ஏற்றுக்கொள்ளாத கதைகள் இருக் கின்றன. மாகாணசபையை முழுமை யாக ஏற்றுக்கொள்ளா விட்டாலும் 89ம் ஆண்டு தனிநாட்டு கோரிக்கை யினை கை விட்டுவிட்டோம் என பகி ரங்கமாக சொல்லித்தான் பாராளு மன்றம் போனோம். இல்லாவிட்டால் 83ம் ஆண்டுபோல தனிநாட்டு கோரிக் கையினை வைத்திருந்த காரணத் தினால் தமிழர் விடுதலை கூட்டணி 18 பேரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோனது. இதில் சம்மந்தன்

ஐயாவின் பதவி தான் முதலில் பறிபோனது. அதே நிலையில் தான் தனிநாடு கேட்கமாட்டோம் என சத்தியப்பிரமாணம் செய்து ஏனைய தமிழ் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் போனவர்கள். இப்பொழுது வீர வசனம் பேசுகின்ற முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்களும் அப்படித்தான்.

18 தடவைகள் மகிந்தராஜ பக்சவுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறோம். 2015ம் ஆண்டு அவருடைய ஆட்சியை மாற்றி இன்னொரு ஆட்சியை கொண்டு வருவதற்கு உதவிய போது எழுத்து மூலமாக எந்த ஒப்பந்தமும் செய்ய வில்லை. இதற்கு மைத்திரிபால தயாராக இருந்தார். இந்த ஒப்பந்தம் எப்படி செய்வது என ஒருநாள் ஒரு கூட்டத்தில் கேட்ட போது சந்திரிக்கா பண்டாரநாயக்க ரணில் விக்கிரமசிங்க மைத்திரிபால சிறிசேன மூவரும் இருக்கத்தக்கதாக நானும் கலாநிதி யாம்பதி விக்கிரம நாயக்க அவரும் இருந்த போது சந்திரிக்கா சொன்னார் சுமந்திரனிடம் யாம்பதி விக்கிரம நாயக்கயையும் அதை எழுதிதர சொல்லி நாங்கள் கையெழுத்து போடுவோம். அப்பொழுது சம்மந்தன் ஐயா சொன்னார் அது வேண்டாம் அப்படி ஏதாவது கைச்சாத்திட்டால் மகிந்த ராஜபக்ச சிங்கள மக்களிடம் இதை சொல்லி பிரச்சாரம் செய்வார். பின்னர் நீங்களும் தோற்றுவிடுவீர்கள் என்று சொன்னார்.

எங்களுக்குள்ளே ஒரு புரிந்துணர்வு இருக்க வேண்டும். என்ன அந்த புரிந்துணர்வு என்றால் 13ம் திருத்தம் உருவாக்கப்பட்டு அது போதாது என்று நாங்கள் சொன்னதால் 93ம் ஆண்டு மங்களமுனசிங்க முன்வைத்த யோசனை பிறேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது. அடுத்தது சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்த போது முன்வைத்த 3 யோசனை 95ஆம் 97ஆம் 2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட்ல பாராளுமன்றத்திற்கு ஒரு நகல்வரைபை கொண்டு வந்தார். அதற்கு பிறகு மகிந்தராஜபக்ச காலத்தில் யுமுசுஊ யோசனை. இந்த மூன்று சிங்கள அரசாங்கங்கள் கொண்டு வந்த யோசனைகளில் எங்களுக்கு பங்கில்லை. இந்த யோசனைகளின் அடிப்படையில் புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். அதுதான் அந்த புரிந்துணர்வு. இதற்கு இணங்கினார். அந்த அடிப்படையில் நாங்கள் ஆதரவு கொடுத்தோம்.

வீடு பற்றி எரிகிறது வெளிக் கிட்டு ஓடுறது தான் அந்த எலக்சன். அதற்கு பிறகு தான் அரசியலமைப்பு எல்லாம். அதைத்தான் நாங்கள் செய்தனாங்கள். அடிக்கடி நான் சொல்வது போல அம்பாறையில் நானும் மாவை சேனாதிராசாவும் உரையாற்றிக் கொண்டிருந்த போது பின் வரிசையில் உள்ள சிறுவன் எழுந்து நின்று சொன்னான் 'ஆட்சி மாற்றம்இ ஆட்சி மாற்றம் என்று எல்லோரும் சொல்லுகின்றனர். எங்களுக்கு மைத்திரியும் எதிரி தான் மகிந்தவும் எதிரி தான். அதனால் அவசரமாக எங்களுக்கொரு எதிரி மாற்றம் தேவையாக இருக்கிறது. அதனால் என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்கு தெரியும்' என்று சொன்னான். தேர்தல் முடிந்து 6 மாதத்திற்கு பின்பு சிறுபிட்டியில் ஒரு சிறிய கூட்டத்தில் கொஞ்சம் கொஞ் சம் முன்னேற்றம் நடந்திருக்கின்றது என்று சொல்லி முடித்துக்கொண்டு வெளியில் வரும் பொழுது இரவா கிவிட்டது. ஒரு வயது போன ஐயா சரத்தை மடித்து கட்டிக்கொண்டு வெறும் மேனியுடன் கொஞ்சம்'' கொஞ்சம்... ஐயா நின்றார். நான் கடந்து போக எனது கையை பிடித்து ''என்ன நடந்தது என்ன நடக்க வில்லை என்று நீ எமக்கு சொல்லத் தேவையில்லை. நான் வீட்டில் இருந்து வெளியில போகும் போது இப்ப என்னுடைய ஐஊ கொண்டு போவதில்லை. அதால நடந்தது என்ன என்று எங்களுக்கெல்லாம் தெரியும். அத சொல்ல நீ ஏன் பயப்படுகிறீர் ''என்று கேட்டார். இப்படியான அடக்கு முறைகளில் இருந்து வெளியில் வந்தது மக்களுக்கு தெரியும். ஆகையால் 2015 ம் ஆண்டு தேர்தல் பற்றி நாங்கள் எடுத்த முடிவு சரி.

அரசியல் அமைப்பில் பல பல விடயங்களில் முன்னேற்றம் போதாது என்பது எங்களுக்கும் தெரியும். இதை நான் ஊடகங்களுக்கும் சொல்லியிருக்கிறேன். ஆனால் அரசியல் அமைப்பு உருவாகும் பணிகள் நிறையவே நடந்திருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு மக்கள் கருத்தறியும் குழு நியமிக்கப் பட்டது. இது புத்தகமாக 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. தெற்கில கூட தமிழ் மக்களுக்கு தீர்வு கொடுக் கப்பட வேண்டும் என இப் புத்தகத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பலருக்கு வியப்பை கொடுத்தது. இந்த பாராளுமன்றம் புதிய அரசியல மைப்பு உருவாக்கும் பேரணையை

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசின் அதிகாரங்கள் மாகாணசபைக்குள் தலையிடக் கூடாது என மகிந்த ராஜபக்சவுடன் இருக்கும் எதிர் அணியினர். அறிக்கை ஒன்றை கொடுத்திருக் கிறார்கள். சட்ட ஒழுங்கு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு உப குழு இருக்கின்றது. இந்த உப குழுவில் நாமல் ராஜபக்சவும் இருக்கின்றார். அவர்கள் எல்லாம் சேர்ந்துதான் இதை செய்து கொண் டிருக்கிறார்கள்.

சென்ற வருடம் செப்டம்பர் 27ம் திகதிதான் அந்த இடைக்கால அறிக்கை வெளி வந்தது. மைத் திரிபாலசிறிசேனா நாட்டை ஆள் வதா? சிறீலங்கா சுதந்திர கட்சியை ஆள்வதா? என்ற பயம் வந்து விட்டது. தன்னுடைய கட்சியையே கட்டுப்படுத்த முடியாதவராக இருக் கிறார்.

அதனால் தான் பின்னடித்துக் கொண்டிருக்கிறார்கள். உள்ளூராட்சி தேர்தல் முடிந்தவுடன் தெற்கிலே மகிந்த ராஜபக்ச பல இடங்களில் வெற்றி பெற்றவுடன் இனி இது நடக்காது என பலர் எண்ணிக்கொண் டிருக்கின்றனர். எங்களுடைய கட்சி யில் உள்ளவர்களும் என்னையும் சம்மந்தன் ஐயா தவிர மற்றவர்களும் அப்படித்தான் எண்ணிக்கொண்டிருக் கிறார்கள். நடக்காது என்று திரையை இழுத்து மூடுவதற்கான நேரம் இன்னும் வரவில்லை. இனியும் அந்த தீர்மானத்திற்கு வரமுடியாது.

புதிய அரசியலமைப்புக்கான வரைபு அடுத்தடுத்த வாரங்களில் வெளி வரும். ஆனால் அதை வழி நடத்தல் குழு அதை அங்கிகரிக்க வேண்டும். யு.என்.பி உம் ஜே.வி.பி உம் எங்க ளுடன் ஒரு இணக்கத் திற்கு வருவார் களானால் பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெருன் பான்மை அடைவதற்கு கொஞ்ச முயற்சிகளை மட்டும்தான் செய்ய வேண்டி இருக் கும். உலக உதைபந் தாட்ட போட்டி களை பார்த்திருக் கிறீர்கள் தானே எதிர்பக்கத்தில் உள்ள கோல் போஸ்ட்க்கு பந்தை நகர்த்திவிட்டுத் தான் கோலை சூட் பண்ண முடியும். அதே மாதிரிதான் அரசியலும். 150 ற்கு இன்னும் 15 தான் வரவேண்டும் அந்த முயற்சியில் ஈடுபட்டுக்கொண் டிருக்கின்றோம். சரிவருவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்குவது எங்களுடைய பொறுப்பு. அதற்காக இறுதி வரைக்கும் போராடுவோம். ●



சில விடயங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இரத்தினப்பிரிய, இவர் ஒரு இராணுவ உயரதிகாரி. கடந்த 2009ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத் திற்குமான யுத்தம் நிறைவடைந்தது. போராட்டம் மௌனிக்கப்பட்டதை தொடர்ந்து மக்களின் மனதை வெல்வதற்காக இப்படியான இராணுவ அதிகாரிகளை வன்னியில் அரசு அனுப்பி சில சலுகைகளை மக்களுக்கு வழங்கி மக்களுடன் சேர்ந்து தாங்களும் வாழ்வதாக வெளிநாடுகளுக்குக் காட்ட அரசு முனைகின்றது. இந்த நிகழ்வுகளை அவதானிக்கும் போது இந்த இரத்தினபிரிய என்கின்ற சிங்கள இராணுவ சிவில் படையணியின் அதிகாரியை ஒரு சமூக சேவகராக அவரை பார்க்க முடியுமா? ஏன் என்றால் கடந்த முப்பது ஆண்டுகளாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக

# ரட்ணப்பிரியாவும் இராஜதந்திரமும்

**செழியன்**

கொடிய யுத்தத்தின் இறுதி வரைக்கும் களமுனையில் நின்று கட்டளை இட்டவர் "இரத்தின பிரிய பண்டு". இவர் ஒரு இராணுவ அதிகாரி. இராணுவ அதிகாரியை வன்னியில் உள்ள சிலர் கண்ணீரோடு கதறி அழுது பிரியாவிடை கொடுத்து வழியனுப்பக் காரணம் என்ன? இவ்வாறான செய்தி ஒன்று அண்மை நாட்களாக சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றது. இதனை ஆழமாக உற்று நோக்கினால் அந்த விடயம் தொடர்பான

யுத்தமொன்று ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் இலங்கை இராணுவத்தினர் புலிகளாக எண்ணி வகை தொகை யின்றி கொன்று குவித்தனர். ஆலயங் கள், பள்ளிக்கூடங்கள், வீதிகள், சந்தைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்கள் எல்லாவற்றிலும் விமானங் களாலும் எறிகனைகளாலும் மக்களை கொன்று குவிக்கப்பட்டனர். கடலில் தொழிலுக்கு செல்பவர்களும் புலிகளா கத்தான் பார்க்கப்பட்டனர். அந்த வகை யில் இவரும் ஒரு இராணுவ உயரதி காரி. சண்டைக்காலத்தில் விரும்பியோ விரும்பாமலோ இவரும் சண்டை யில் ஈடுபட்டிருப்பார். ஆனால் இவைக ளெல்லாம் முடிந்த பின்னர் வாழ்க்கை யில் கல்வி மற்றும் ஏனைய பல விடயங்களை தொலைத்து விட்டு இனி என்ன செய்வது? என்ன செய்யப் போகிறோம் என்று ஏங்கிக்கொண்டிருந்த இளைஞர்கள் யுவதிகள் உட்பட சில ருக்கு அரசின் சிவில் பாதுகாப்பு படை யின் பிரிவின் கீழ் இயங்கும் (CSD) திணைக்களத்தில் வேலை வாய்ப்பினை வழங்கியிருக்கின்றார்கள். யுத்தத்தின் கோரப்பிடியில் கை, கால், கண் மற்றும் உடலில் துப்பாக்கி றவைகளின் சல்லடைகளோடு காணப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் குடும்பங்கள் என இவர்களில் ஒரு சிலரை அடையா ளங்கண்டு செயற்பட்டிருக்கிறார்கள். தற்போது அரச வேலைதான் வேண்டு மென பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங் களில் அலையும் மக்கள் கூட்டத்தை நாம் நேராக பார்க்கின்றோம். வேலை தருவதாக பணத்தை இலஞ்சமாக பெற்று பலரை ஏமாற்றுவதையும் நாம் கடந்த சில தினங்கள் முன் பத்திரிகை செய்தியில் பார்த்தோம். அந்த வகை யில் சிவில் பாதுகாப்பு படைக்கு இணைவதற்கு மக்கள் மறுப்புத் தெரிவித்தாலும் இதுவரை 3500 பேருக்கு மேல் அரச வேலையினை பெற்றுக் கொடுத்ததனூடாக தன்னு டைய இலக்கை அடைந்திருக்கிறார்.

இதே போன்று தான் யுத்தம் முடிவடைந்தவுடன் முன்னாள் போராளி களுக்கு பல தடுப்பு முகாங்கள் உரு வாக்கப்பட்டது யாவருக்கும் தெரிந்த விடயம் அந்த தடுப்பு முகாங்களை ஐநா மனித உரிமை சபை, வெளிநாட் டிலுள்ள சில மனித உரிமை அமைப் புக்கள் மட்டுமல்லாது எல்லா வெளி நாடுகளும் கண்காணித்து வந்த போது இந்த தடுப்பு முகாமில் உள்ள போரா ளிகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளையும் அரசாங் கம் அனுப்பியுள்ளது.


வவுனியாவில் கந்தபுரம் மகாவித்தியாலயத்தில் உள்ள தடுப்பு முகாம்களில் "கப்டன் வெலகெதர" என்னும் இராணுவ அதிகாரி இடம்மாறிச் செல்லும் போது அங்கிருந்த முன்னாள் போராளிகள் கதறி அழும் காட்சிகள் வீடியோ, போட்டோ எடுக்கப்பட்டு தென்னிலங்கையில் உள்ள சிங்கள, ஆங்கில ஊடகங்களில் வெளிவந்தது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சனைகள் எதுவுமில்லை அவர்களும் நாங்களும் ஒன்றாகிவிட்டோம் என ஐநா சபைக்கு காட்டுவதற்காக அரசாங்கம் காட்டும் நாடகங்களில் இதுவும் ஒன்றே என்பதில் ஐயமில்லை. ●

---

# பாலம்

## *ஒரு பார்வை*



வடமராட்சி கிழக்கில் நீண்ட காலமாக பழுதடைந்து காணப்படும் மாமுனை பளை வீதியினை திருத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை ஆகியவற்றுக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியும் இது வரைக்கும் வேலை ஆரம்பிப்பதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. 1950 ஆம் ஆண்டுகளில் இருந்து ஐந்து கிராம மக்கள் இவ் வீதியூடாகவே பளையினை சென்றடைகின்றனர். 1991 ஆம் ஆண்டும் 2003 ஆண்டும் இவ் வீதியின் சிறு திருத்தங்களை அமெரிக் காவில் புலம் பெயர்ந்து வசிக்கும் இராசலிங்கம் தனது சொந்த நிதியிலும் 2005 ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களின் நண்பர் களின் நிதியில் திருத்தங்கள் செய்யப் பட்டன.

பருத்தித்துறை பிரதேச சபையில் 21 உறுப்பினர்கள் இதில் 9 பேர் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர்கள். இவ்வீதி பருத் தித்துறை பிரதேச சபைக்கு சொந்தமான பகுதிகளே மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

● திசா

தொடர்கதை

# பொன்னியின் செல்வன்

## ஆடித்திருநாள்

ஆதி அந்தமில்லாத கால வெள்ளத்தில் கற்பனை ஓடத்தில் ஏறி நம்முடன் சிறிது நேரம் பிரயாணம் செய்யுமாறு நேயர்களை அழைக்கிறோம். விநாடிக்கு ஒரு நூற்றாண்டு வீதம் எளிதில் கடந்து இன்றைக்குத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குச் செல்வோமாக.

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட:டுக்கும் இடையில் உள்ள திருமுனைப்பாடி நாட்டின் தென்பகுதி யில், தில்லைச் சிற்றம்பலத்துக்கு மேற்கே இரண்டு காததூரத்தில் அலை கடல் போன்ற ஊர் ஏரி விரிந்து பரந்து கிடக்கிறது. அதற்கு வீரநாராயணஏரி என்று பெயர்.

அது தெற்கு வடக்கில் ஒன்றரைக்காத நீளமும் கிழக்கு மேற் கில் அரைக்காத அகலமும் உள்ளது. காலப் போக்கில் அதன் பெயர் சிதைந்து இந்நாளில் வீராணத்து ஏரி என்ற பெயரால் வழங்கி வருகிறது.

புது வெள்ளம் வந்து பாய்ந்து ஏரியில் நீர் நிரம்பித் ததும்பி நிற்கும் அடி ஆவணி மாதங்களில் வீரநாராயண ஏரியைப் பார்ப்பவர் எவரும் தம்முடைய பழந்தமிழ் நாட்டு முன்னோர்கள் தங்கள் காலத்தில் சாதித்த அரும் பெரும் காரியங்களைக் குறித்துப் பெருமிதமும் பெரு வியப்பும் கொள்ளாமலிருக்க முடியாது. நம் மூதாதையர்கள் தங்களுடைய நலனுக்கும் தங்கள் காலத்திய மக்களின் நலனுக்கும் உரிய காரியங்களை மட்டுமா செய்தார்கள்? தாய்த் திருநாட்டில் தங்களுக்குப் பிற்காலத்தில் வாழையடி வாழையாக வரப்போகும் ஆயிரங்கால சந்ததிக ளுக்கும் நன்மை பயக்கும் மாபெரும் செயல்களை நிறைவேற்றி விட்டுப் போனார்கள் அல்லவா?

ஆடித் திங்கள் பதினெட்டாம் நாள் முன் மாலை நேரத்தில் அலை கடல் போல் விரிந்து பரந்திருந்த வீர நாராயண ஏரிக்கரை மீது ஒரு வாலிப வீரன் குதிரை ஏறிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தான். அவன் தமிழ கத்து வீர சரித்திரத்தில் புகழ்பெற்ற வாணர் குலத்தைச் சேர்ந்தவன். வல்ல

வரையன் வந்தியத்தேவன் என்பது அவன் பெயர்.

நெடுந்தூரம் பிரயாணம் செய்து அலுத்துக் களைத்திருந்த அவனுடைய குதிரை மெள்ள மெள்ள நடந்து சென்று கொண்டிருந்தது. அதைப் பற்றி அந்த இளம் வீரன் கவலைப்படவில்லை. அகண்டமான அந்த வீர நாராயண ஏரியின் தோற்றம் அவன் உள்ளத்தை வசீகரித்திருந்தது.

ஆடிப் பதினெட்டாம் பெருக் கன்று சோழ நாட்டு நதிகளிலெல்லாம் வெள்ளம் இருகரையும் தொட்டுக் கொண்டு ஓடுவது வழக்கம். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக கொண்டு அலை மோதிக் கொண்டிருப்பது வழக்கம். வடகாவேரி என்று பக்தர்களாலும் கொள்ளிடம் என்று பொது மக்களாலும் வழங் கப்பட்ட நதியிலிருந்து வட வாற்றின் வழியாகத் தண்ணீர் வந்து வீர நாராயண ஏரியில் பாய்ந்து அதை ஒரு பொங்கும் கடலாக ஆக்கியிருந்தது.

அந்த ஏரியின் எழுபத்து நான்கு கணவாய்களின் வழியாகவும் தண்ணீர் குமுகுமுவென்று பாய்ந்து சுற்றுப் பக்கத்தில் நெடுந்தூரத்துக்கு நீர் வளத்தை அளித்துக் கொண்டிருத்தது. அந்த ஏரித்தண்ணீரைக் கொண்டு கண்ணுக்கெட்டி தூரம் களனிகளில் உழவும் விரை தெளியும் நடவும் நடந்து கொண்டிருந்தன.

உழுது கொண்டிருந்த குடியா னவர்களும் நடவு நட்டுக்கொண்டிருந்த குடியாவைப் பெண்களும் இனிய இசைகளில் குதூகலமாக அங்கங்கே பாடிக்கொண்டிருந்தார்கள். இதையெல் லாம் கேட்டுக் கொண்டு வந்தியத்தேவன் களைத்திருந்த குதிரையை விரட்டாமல் மெதுவாகவே போய்க்கொண்டிருந்தான். ஏரிக்கரை மீது ஏறியதிலிருந்து அந்த ஏரிக்கு எழுபத்துநாலு கணவாய்கள் உண்டு என்று சொல்லப்படுவது உண்மைதானா என்று அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவன் கணவாய்களை எண்ணிக் கொண்டே வந்தான். ஏறக்குறைய ஒன்றரைக் காதுதூரம் அவன் அந்த மாபெரும் ஏரிக்கரையோடு வந்த பிறகு எழுபது கணவாய்களை எண்ணியிருந்தான்.

ஆகா! இது எவ்வளவு பிரம் மாண்டமான ஏரி? எத்தனை நீளம்?

எத்தனை அகலம், தொண்டை நாட்டில் பல்லவப் பேரரசர்களின் காலத்தில் அமைத்த ஏரிகளையெல்லாம் இந்த ஏரிக்கு முன்னால் சிறிய குளங் குட்டைகள் என்றே சொல்லத் தோன்றும் அல்லவா? வட காவேரியில்வீணாகச் சென்று கடலில் விழும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்காக மதுரை கொண்ட பராந்தகரின் புதல்வர் இளவரகர் இராஜாதித்தர் இந்தக் கடல் போன்ற ஏரியை அமைக்க வேண்டுமென்று எண்ணினாரே? எண்ணி அதைச் செயலிலும் நிறைவேற்றினாரே? அவர் எப்பேர்ப்பட்ட அறிவாளியாயிருந்திருக்க வேண்டும்?

வீர பௌருஷத்திலேதான் அவருக்கு இணை வேறு யார்? தக் கோலத்தில் நடந்த போரில் தாமே முன்னணியில் யானைமீது ஏறிச் சென்று போராடினார் அல்லவா? போராடிப் பகைவர்களின் வேலை மார்பிலே தாங்கிக் கொண்டு உயிர்நீத்தார் அல்லவா? அதனால் யானை மேல் துஞ்சிய தேவர் எனப் பெயர்பெற்று வீர சொர்க்கம் அடைந்தார் அல்லவா?

இந்தச் சோழ குலத்து மன்னர் களே அதிசயமானவர்கள்தான்! அவர்கள் வீரத்தில் எப்படியோ அப் படியே அறத்திலும் மிக்கவர்கள். அறத்தில் எப்பயோ அப்படியே தெய்வ பக்தியில் சிறந்தவர்கள். அத்த கைய சோழ குல மன்னர்களுடன் நட்புரியை கொள்ளும் பேறு தனக்குக் கிடைத் திருப்பது பற்றி நினைக்க நினைக்க வந்தியத்தேவனுடைய தோள்கள் பூரித்தன.

மேற்குத் திசையிலிருந்து வீரென்று அடித்த காற்றினால் வீர நாராயண ஏரித் தண்ணீர அலைமோதிக் கொண்டு கரையைத் தாக்கியது போல் அவனுடைய உள்ளமும் பெருமிதத் தினால் பொங்கித் ததும்பிற்று.

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டு வீர நாராயண ஏரிக்கரையின் தென்கோடிக்கு வந்தியத்தேவன் வந்து சேர்ந்தான். அங்கே வட காவேரியி லிருந்து பிரிந்து வந்த வடவாறு. ஏரியில் வந்து சேரும் காட்சயைக் கண்டான். ஏரிக்கரையிலிருந்து சிறிது தூரம் வரையில் ஏரியின் உட்புறம் படுகையாக அமைந்தீரந்தது. வெள்ளம் வந்து மோதும்போது கரைக்குச் சேதம் உண்டாகாமல் இருக்கும் பொருட்டு

அந்தப் படுகையில் கருவேல மரங்களையும் விளாமரங்களையும் நட:டு வளர்த்திருந்தார்கள். கரை யோரமாக நாணல் அடர்த்தியாக வளர்ந்திருந்தது. தென்மேற்குத் திசையிலிருந்து இருபுறமும் மர வரிசையுடன் வடவாற்றின் வெள்ளம் வந்து ஏரியில் கலக்கும் காட்சி சற்றுத் தூரத்திலிருந்து பார்க்குபோது அழகிய வர்ணக் கோலம் கோட்டது போல் காணப்பட்டது.

இந்த மனோகரமான தோற்றத் தின் இனிமையையும் குதஸகலத்தை யும் அதிகப்படுத் தும்படியான இன்னும் சில காட்சிகளை வந்தியத்தேவன் அங்கே கண்டான்.

அன்று பதினெட்டாம் பெருக்குத் திருநாள் அல்லவா? பக்கத்துக் கிராமங் களிலிருந்து தந்த நிறத் தென்னங் குருத்துகளால் சப்பரங்கள் கட்டி இழுத்துக்கொண்டு கும்பல் கும்பலாக மக்கள் அங்கே வந்து கொண்டிருந் தார்கள்.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சில வயோதிகர்களும் கூடப் புதிய ஆடைகள் அணிந்து விதவிதமான அலங்காரங்கள் செய்து கொண்டு வந்திருந்தார்கள். பெண்களின் கூந்தல்களைத் தாழம்பூ, செவந்திப்பூ, மல்லிகை, முல்லை, இருவாட்சி செண்பகம் முதலிய மலர்கள் கொத்துக் கொத்தாய் அலங்கரித்தன. கூட்டாஞ் சோறும், சித்திரான்னமும் எடுத்துக் கொண்டு பலர் குடும்பம் குடும்பமாக வந்திருந்தார்கள். சலர் ஏரிக்கரையில் தண்ணீர் ஓரமாக நின்று கொண்டு, சித்திரான்னம் முதலியவற்றைக் கமுகு மட்டைகளில் போட்டுக் கொண்டு உண்டார்கள்.

இன்னும் சில தைரியசாலிகள் சிறிது தூரம் தண்ணீரில் நடந்து சென்று வடவாற்றங்கரையை அடைந்து அங்கு நின்றபடி சாப்பிட்டார்கள். குழந்தைகள் சிலர் சாப்பிட்ட கமுகு மட்டைகளைத் கணவாய்களின் ஓரமாய் எறிய அந்த மட்டைகள் கணவாய்களின் வழியாக ஏரிக்கரைக்கு வெளியே விழுந்தடித்து ஓடி வருவதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தார்கள்.

ஆடவர்களில் சில வம்புக் காரர்கள் தங்கள் காதலிகளின் கூந்தல் களில் சூடியிருந்த மலர்களை அவர்கள்

அறியாமல் எடுத்துக் கணவாய் ஓரத்தில் விட:டு ஏரிக்கரைக்கு மறு பக்கத்தில் அவை ஓடி வருவதைக் கண்டு மகிழ்ந் தார்கள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் வல்லவரையன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அங்கு நின்ற பெண்களில் இனிய குரலையுடைய சிலர் பாடுவதையும் காது கொடுத்துக் கேட்டான். அவர்கள் ஓடப்பாட்டும், வெள்ளப்பாட்டும், கும்மியும், சிந்தும் பாடினார்கள்.

வடவாறு பொங்கி வருது

வந்து பாங்கள் பள்ளியரே!

வெள்ளாறு விரைந்து வருது

வேடிக்கை பாருங்கள், தோழியரே!

காவேரி புரண்டு வருது காண

வாங்கள், பாங்கியரே!

என்பன போன்ற வெள்ளப் பாட்டுக்கள் வந்தியத்தேவன் செவிகளில் இன்ப வெள்ளமாகப் பாய்ந்தன.

வேறு சிலர் சோழ குல மன்னர் களின் வீரப் புகழைக் கூறும் பாடல் களைப் பாடினார்கள். முப்பத்திரண்டு பேர்களில் ஈடுபட்டு, உடம்பில் தொண் ணூற்றாறு காயங்களை ஆபரணங் களாகப் பூண்டிருந்த விஜயாலய சோழ னின் வீரத்தைச் சில பெண்கள் பாடினார்கள்.

அவனுடைய மகன் ஆதித்த சோழனுடைய வீரத்தைப்போற்றிஅ வன் காவேரி நதி உற்பத்தியாகுமிடத்திலிருது கடலில் சேரும் இடம் வரையில் அறுபத்து நாலு சிவாலயங்கள் எடும் பிபத்ததை ஒரு பெண் அழகிய பாட்டாகப் பாடினாள்.

ஆதித்தனுடைய மகன் பராந்தக சோழ மகாராஜன் பாண்டியர்களையும் பல்லவர்களையும் சேரர்களையும் வென்று, ஈழத்துக்குப் படை அனுப்பி வெற்றிக் கொடி நாட்டிய மெய்க் கீர்த்தியை இன்னொரு பெண் உற்சாகம் ததும்பப் பாடினாள். ஒவ்வொருத்தியும் பாடியபோது அவளைச் சுற்றிலும் பலர் நின்று கேட்டார்கள். அவ்வப்போது ஆ! ஆ! என்று கோஷித்துத் தங்கள் மகிழ்ச் சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

குதிரை மீது இருந்தபடியே அவர்களுடைய பாடல்களைக் கேட:டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனை ஒரு மூதாட்டி கவனித்தாள். தம்பி! வெகு தூரம் வந்தாய் போலிருக்கிறது. களைத்திரக்கிறாய்! குதிரை மீதிருந்து இறங்கி வந்து கொஞ்சம் கூட்டா நீ சோறு சாப்பிடு! என்றாள்.

உடனே பல இள நங்கைககள் நம் வாலிபப் பிரயாணியைப் பார்த் தார்கள். அவனடைய தோற்றத்தைக் குறித்துத் தங்களுக்குள் இரகசியமாய்ப் பேசிக்கொண்டு ககலகலவென்று சிரித்தாரகள். வந்தியத்தேவனை ஒரு பக்கம் வெட்கமும் இன்னொருபுறம் குதூகலமும் பிடுங்கித் தின்றன. அந்த மூதாட்டி சொற்படி இறங்கிச் சென்று அவள் தரும் உணவைச் சாப்பிடலாமா என்று ஒருகணம் சிந்தித்தான்.

அப்படிச் சென்றால் அங்கே நின்ற இளமங்கைமார்கள் பலரும் அவனைச் சூழ்ந்துகொண்டு பரிகசித்துச் சிரிப்பார்கள் என்பது நிச்சயம். அதனால் என்ன அத்தனை அழகிய பெண்களை ஒரே இடத்தில் காண்பது சுலபமான காரியமா? அவர்கள் தன்னைப் பரிகசித்துச் சிரித்தாலும் அந்த ஒலி தேவகானமாகவே இருக்கும். வந்தியத்தேவனின் யெனவனக் கண்களுக்கு அந்த ஏரிக் கரையில் நின்ற நற்கைகள் எல்லாரும் அரம்பைகளாகவும் மேனகைகளாகவுமே தோன்றினார்கள்!

ஆனால் அதே சமயத்தில் தென்மேற்குத் திசையில் வடவாற்றின் நீரோட்டத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைச் சிறிது தயங்கச் செய்தது. வெள்ளைப் பாய்கள் விரிக்கப்பட்ட ஏழெட்டுப் பெரிய ஓடங்க்ள, வெண் சிறகுகளை விரித்து கொண்டு நீரில் மிதந்து வரும் அன்னப் பட்சிகளைப் போல் மேலக்காற்றினால் உந்தப்பட்டு விரைந்து வந்து கொண்டிருந்தன.

ஏரிக்கரையில் பலவகைக் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்த ஜனங்கள் அத்தனை பேரும் அந்தப் படககள் வரும் திசையையே ஆவலுடன் பார்க்கத் தொடங்கினார்கள்.

அந்தப் படகுகளிலே ஒரு படகு எல்லாவற்றுக்கும் முன்னதாக விரைந்து வந்து ஏரிக்கரையில் குதித்திறங்கிஅ ங்கே இருந்த ஜனங்களைப் பார்த்துப் போங்கள்! போங்கள்! என்று விரட் டினார்கள். அவர்கள் அதிகமாக விரட்

டுவதற்கு இடம் வையாமல் ஜனங்களும் அவரவர்களுடைய பாத்திரங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு விரைந்து கரையேறத் தொடங்கினார்கள்.

வந்தியத்தேவனுக்கு இது ஒன்றும் விளங்கவில்லை. இந்த வீரர்கள் யார்? பின்னால் வரும் பாய் விரித்த படகு களில் யார் வருகிறார்க்ள? எங்கிருந்து வருகிறார்க்ள? ஒருவேளை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்க ளாயிருப் பார்களோ?

ஏரிக்கரையில் கையிலே கோல் பிடித்து நின்ற பெரியவர் ஒருவரை வல்லவரையன் அணுகினான். ஐயா! இந்த வீரர்கள் யாரைச் சேர்ந்தவர்கள்? அதோ பின்னால் வரும் அன்னக்கூட்டம் போன்ற ஓடங்கள் யாருவடையவை? எதற்காக இவ்வீரர்கள் மக்களை விரட்டுகிறார்கள்? மக்களும் எதற்காக விரைகிறார்கள்? என்று கேள்விகளை அடுக்கினான்.

தம்பி! உனக்குத் தெரிய வில்லையா என்ன? அதோ அந்தப் படககுகளின் நடுப்படகில் ஒரு கொடி பறக்கிறதே! அதில் என்ன எழுதி யிருக்கிறது. பார் என்றார் பெரியவர்.

பனைமரம் போல் தோன்றுகிறது.

பனைமரந்தான்! பனைமரக் கொடி பழுவேட்டரையர் கொடி என்று உனக்குத் தெரியாதா?

மகாவிரர் பழுவேட்டரையரா வருகிறார்? என்று வந்தியத் தேவன் திடுக்கிட்டு குரலில் கேட்டான்.

அப்படித்தான் இருக்கவேண்டும் பனைமரக் கொடியை உயர்த்திக் கொண்டு வேறு யார் வரமுடியும்? என்றார் பெரியவர்.

வல்லவரையனுடைய கண்கள் அளவிலா வியப்பினால் விரிந்து படகுகள் வந்த திசையை நோக்கின. பழுவேட்டரையரைப் பற்றி வல்லவரையன் எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தான். யார்தான் கேள்விப்படாமலிருக்க முடியும்? தெற்கே ஈழநாட்டிலிருந்து வடக்கே கலிங்க நாடுவரையில் அண்ணன் நம்பிகளான பெரிய பழுவேட்டரையர். சின்னப் பழுவேட்டரையர் என்பவர்களடைய பெயர்கள் பிரசித்தமாயிருந்தன. உறையூருக்குப் பக்கத்தில் வட காவேரியின் வடகரையில் உள்ள

பழுவூர் அவர்களடைய நகரம் விஜயாலய சோழன் காலத்திலருந்து பழுவேட்டரையர் குலம் வீரப் புகழ் பெற்றிருந்தது. அக்குடும்பத்தார் சோழ மன்னர் குடும்பத்துடன் கொள்வினை கொடுப்பினை செய்து வந்தனர். இது காரணமாகவும் அவர்களுடைய குலத்தொன்மை வீரப்புகழ் இவை காரணமாகவும் பழுவேட்டரையர் குலம் அரச குலத்தின் சிறப்புகள் எல்லாம் பெற்றிருந்தது. தனியாகக் கொடி போட்டுக் கொள்ளும் உரிமையும் அக்குலத்துக்கு உண்டு.

இப்போதுள்ள பழுவேட்டரையர் இருவரில் மூத்தவர் இருபத்து நான்கு பேர்களில் இடுபட்டவர். அவருடைய காலத்தில் அவருக்கு இணையான வீரர் சோழ நாட்டில் யாருமில்லையென்று புகழ்பெற்றவர். இப்போது பராயம் ஐம்பதுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அவர் போர்க்களங்களுக்கு நேரில் செல்வதில்லை.

ஆனால் சோழ நாட்டு அரசாங்கத்தில் மிக உன்னதமான பல பதவிகளை வகித்து வந்தார். அவர் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி தான்யாதிகாரி தனபண்டாரமும் தான்ய பண்டாரமும் அவருடைய அதிகாரத்தில் இருந்தன. அரசியலின் தேவைக்குத் தகுந்தபடி இறை விதித்து வசூலிக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது.

எந்தச் சிற்றரசரையும், கோட்டத்தலைவரைம். பெரிய குடித்தனக் காரரையும் இவ்வாண்டு இவ்வளவு இறை தர வேண்டும்? என்று கட்டளை யிட்டு வசூலிக்கும் உரிமை அவருக்கு இரந்தது. ஆகவே சுந்தர சொழ மகாராஜாவக்கு அடத்தபடியாகச் சோழ சாம்ராஜ்யத்தில் இப்போது வலிமை மிக்கவர் பழுவேட்டரையர்தான்.

அந்தகைய மகாவீரரும் அளவிலா வலிமையும் அதிகாரமும் படைத்தவருமான பெரிய பழுவேட்டரையரைப் பார்க்க வேுண்டும் என்ற ஆவல் வந்தியத்தெவனுடைய உள்ளத்தில் பொங்கியது. ஆனால் அதே சமயத்தில் காஞ்சி நகரின் புதிய பொன் மாளிகையில் அளவரசர் ஆதித்த கரிகாலன் தன்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன செய்தி அவனுக்கு நினைவு வந்தது.

வந்தியத்தேவா! நீ சுத்த வீரன் என்பதை நன்கு அறிவேன். அத்துடன்

நீ நல்ல அறிவாளி என்று நம்பி இந்த மாபெரும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். நான் கொடுத்த இரு ஓலைகளில் ஒன்றை என் தந்தை மகாராஜாவிடமும் ஒப்புவிக்க வேண்டும். தங்சையில் இராஜ்யத்தின் பெரிய பெரிய அதிகாரிகளைப் பற்றிக்கூட ஏதேதோ கேள்விப்படுகிறேன்.

ஆகையால் நான் அனுப்பும் செய்தி யாருக்கும் தெரியக்கூடாது. எவ்வளவு முக்கியமான வராயிருந் தாலும் நீ என்னிடமிரந்து ஓலைகொண்டு போவது தெரியக்கூடாது. வழியில் யாருடனும் சண்டை பிடிக்கக்கூடாது நீயாக வலுச்சண்டைக்குப் போகாமலி ருந்தால் மட்டும் போதாது மற்றவர்கள் வலுச் சண்டைக்கு இழுத்தாலும் நீ அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. உன் னுடைய வீரத்தை நான் நன்கறிவேன். எத்தனையோ தடவை நிரூபித்திருக் கிறாய். ஆகையால் வலிய வரும் சண்டையிலிருந்து விலகிக் கொண் டாலும் கெளரவக் குறைவு ஒன்றும் உனக்கு ஏற்பட்டு விடாது.

முக்கியமாக. பழுவேட்ட ரையர்களிடமும் என்ன சிறிய தந்தை மதுராந்தகரிடமும் நீ மிக்க ஜாக்கிர தையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களக்கு நீ என்று கூடத் தெரியக் கூடாது நீ எதற்காகப் போகிறாய் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரியக் கூடாது!

சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத் துக்குரிய இளவரசரும் வடதிசைச் சைன்யத்தின் மகாதண்ட நாயகருமான ஆதித்த கரிகாலர் இவ்விதம் சொல்லி யிருந்தார். மேலும் வந்தியத்தேவன் நடந்துகொள்ள வேண்டிய விதங்களைப் பற்றியும் படித்துப் படித்துக் கூறியிருந் தார். இவையெல்லாம் நினைவுவரவே பழு வேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வல்லவரையன் அடக்கிக்கொண்டான்.

குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றான். என்ன தட்டி விட்டாலம் களைப்புற்றிருந்த அந்தக் குதிரை மெதுவாகவே சென்று இன்று இரவு கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கிவிட்டு நாளைக் காலையில் புறப்படும்பொது வேறு நல்ல குதிரை சம்பாதித்துக் கொண்டே கிளம்ப வேண்டும் என்று மனத்திற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

●



கிருஷ்ணா பிறஸ் யூஸ்
KRISHNAA FRESH JUSE
Necto


வர்ஷன்
எலக்ரோனிக்ஸ்
VARSAN ELECTRONICS
கொடிகாம வீதி நெல்லியடி
021 226 2511


Macksonic
Macksonic
Panasonic
dishtv
dishtv
Richpower
Gas Stove